**வடக்கின் துரித மீளெளுச்சி செயற்திட்டம் (ஈஎன்ஆர்ஈபி) - 2013**

வடக்கின் துரித மீளெளுச்சி செயற்திட்டத்தின் (ஈஎன்ஆர்ஈபி) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 சனவரி 11 ஆம் திகதிய 4676-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II பீ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வடக்கு மாகாண சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டமானது வட மாகாணத்தில் மத்தியில் தாபிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (பிஎம்யூ) மற்றும் வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட அமுலாக்கல் கூறுகள் என்பவற்றின் ஊடாக அமுலாக்கப்படுகின்றது. வடமாகாணத்தில் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை (ஐடிபிஎஸ்) அவர்களின் வட மாகாணத்திலுள்ள சொந்த வதிவிடங்களிற்கு உடனடியாக திரும்புவதற்கும் அவர்களுடைய சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையை மீள கட்டியெழுப்புவதற்கும் இலங்கை அரசாங்கத்தினுடைய முயற்சிகளிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிதியளிப்பு உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் எஸ்டிஆர் 40.9 மில்லியனானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 சனவரி 11 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலம் 2013 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 செயற்திட்டத்தின் நடவடிக்கைகள்

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், இச்செயற்திட்டம் 3 பிரதான பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அதாவது பகுதிகள் ஏ, சீ, டீ என்பனவாகும். சேயற்திட்டத்தின் அந்த மூன்று பகுதிகள் தொடர்பான நடவடிக்கைகள் கீழே பொழிப்பாக்கித் தரப்படுகின்றது.

பகுதி ஏ: திரும்புவோருக்கான அவசர உதவிகள்

---

காணிச் சச்சரவுகளின் தீர்வுகளிற்கு உதவியளித்தல், திரும்புவோர்கள் செயற்திட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிற்கு உடனடி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதல், பயிர்ச் செய்கைக்கான காணியை தயார்படுத்தல், விவசாயத்திற்கான விதைகளையும் கடற்றொழில் உபகரணங்களையும் வழங்கல் போன்ற வாழ்வாதார நிலைத்துநிற்கின்ற நடவடிக்கைகளில் மீள ஈடுபடுத்துவதற்காக திரும்புவோருக்கு அவர்களுடைய முயற்சிகளில் ஆதரவளித்தல்.

பகுதி சீ: அத்தியாவசிய பொதுமக்கள் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணம்

---

கிராமங்களிற்கிடையிலான தொடர்புகளை மீளத் தாபித்தல் மற்றும் பாடசாலைகளை அணுகுதல் சுகாதார சிகிச்சை நிலையங்கள், சந்தைகள், பாதுகாப்பான குடிநீர் மற்றும் அத்தியாவசியமான பொதுமக்கள் சேவைகளும் வசதிகளும் என்பவற்றினைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகிய நோக்கங்களுடன் யுத்தத்தால் சேதமடைந்த பிரதான பொதுமக்கள் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை திருத்தல், புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் மீளமைத்தல் என்பவற்றிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல்.

பகுதி டி: செயற்திட்ட முகாமைத்துவம், மேற்பார்வை, கண்காணிப்பு, மதிப்பாய்வு மற்றும் விசேட கற்கைகள் என்பன.

---

செயற்திட்ட முகாமைத்துவம், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு, வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு, வசதிகளின் புனரமைப்பு, செயற்திட்டத்தின் பகுதி சீ இன் கீழ் விபரிக்கப்பட்ட நிர்மாண மேற்பார்வை, தர உத்தரவாதம் என்பவற்றிற்கான தொழில்நுட்ப உதவியினை வழங்குதல் மற்றும் செயற்திட்டத்தின் அபிவிருத்திச் செயல்திறன்களையும் அத்துடன் வட மாகாணத்தின் எதிர்கால நீண்டகால அபிவிருத்தியினையும் மேம்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் அபிவிருத்திக்கான பயனுறுதியை முன்னேற்றுவதற்காகவும் வேண்டப்பட்ட கணக்காய்வு, கணிப்பீடு, ஆலோசனைகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கற்கைகள், விரிவான தேவை மதிப்பீடுகள், உபாயங்கள் மற்றும் சாத்திய வள கற்கைகள்,

விசேட கற்கைகள் என்பவற்றினை மேற்கொள்ளுதல் போன்ற அம்சங்களில் நலன் பெறுனர்களிற்கு உதவியளித்தல்.

## 1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக்

காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது (எஸ்ஓஈஎஸ்) அவை நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கமைய மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 1,407,440,114 ஆகவும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 7,161,433,693 ஆகவும் இருந்தன. மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது

| செலவின விடயங்கள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| **பகுதி : ஏ** | | | |
| உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களிற்கான அவசர உதவி | | | |
| (ஆ) சிவில் வேலைகள் | 4,620,885 | 37,008,486 | 245,930,135 |
| **பகுதி : சீ** | | | |
| அத்தியாவசியமான பொது மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை புனரமைத்தலும் புனர் நிர்மாணம் செய்தலும் | 1,346,649,758 | 2,238,231,002 | 6,548,228,931 |
| **பகுதி : டி** | | | |
| செயற்திட்ட முகாமைத்துவம், மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு மற்றும் விசேட கற்கைகள் | 56,169,471 | 86,325,252 | 367,274,627 |

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | **1,407,440,114** | **2,361,564,740** | **7,161,433,693** |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரியில் உள்ளவாறான ஆரம்ப மீதி | 9,281,722 | 1,180,271,244 |
| கூட்டு :- மீள்நிரப்பல்கள் | 4,110,444 | 536,705,562 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 5,164,711 |
| | 13,392,166 | 1,722,141,517 |
| கழி :- பற்றுதல்கள் | 11,358,438 | 1,456,225,395 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | **2,033,728** | **265,916,122** |

## 5. கணக்காய்வு அவதானிப்பு

ஆண்டின் இறுதியில் கட்டுநிதி நிதியக் கணக்கில் இருக்கின்ற மீதி ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களாக காட்டுவதற்குப் பதிலாக கடன் பெறுகைகளாக கருதப்பட்டிருந்தது.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான திரண்ட செலவினம் தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் |
| ஐடிஏ | 65 | 7,510 | 1,450 | 11.13 | 1,435 | 59.69 | 7,112 |
| இலங்கை அரசாங்கம் | - | - | - | - | 2 | - | 12 |
| **மொத்தம்** | **65** | **7,510** | **1,450** | **11.13** | **1,437*** | **59.69** | **7,124*** |

* அட்டுறு செலவினத்தின் கணக்கீடு காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்படட்ட தொகைளிலிருந்து இத்தொகைகள் வேறுபடுகின்றன.

## 6.2. பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 முதல் 2013 வரை ரூபா 8,106.07 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட 43 சிவில் வேலை ஒப்பந்தங்கள் ஒப்பந்தகாரர்களின் நலிவான செயலாற்றல் காரணமாக பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், உரிய ஒப்பந்தங்கள் இடைநிறுத்திய நேரத்தில் உரிய ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 6,499.73 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட பணிப்பாளரின் கருத்துப்படி, வேலைகளை பூர்த்தியாக்குவதற்கும் ஒப்பந்தங்களை திரும்ப வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என்பதாகும். எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்ற அறிக்கையிக்படி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மவாட்டங்களில் வீதிகளின் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணம், வீடமைப்பு மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்கள் என்பவற்றை திரும்ப வழங்குவதற்கு போதிய நடவடிக்கை எடுக்காது பூர்த்திசெய்யப்படாமல் இருந்தது.

(ஆ) கணக்காய்வின் போது செய்யப்பட்ட வெளிக்கள பரிசோதனைகள் மன்னார் மாவட்டத்தில் மறிச்சுக்கட்டியில் கமநல சேவைகள் நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் உரக் களஞ்சியம் மற்றும் நெடுங்கேணியில் பயிற்சி நிலையத்தில் நிர்மாணிக்கப்ட்ட உழவு இயந்திர

தரிப்பிடம் என்பன குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் பயனற்றிருந்ததென வெளிப்பட்டது.

(இ) நெடுங்கேணியில் சனசமூக நிலையத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம், கூட்டுறவு சங்கங்களின் விற்பனை மற்றும் கூடம் மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கான அலுவலக கட்டிடங்கள் என்பவற்றில் 2014 பெப்ரவரி மாதத்தில் செய்யப்பட்ட களப் பரிசோதனையில் சில குறபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தகாரர்களிற்கு சகல நிலுவைகளையும் தீர்ப்பனவு செய்த பின்னரும் கூட திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்